## குளியாப்பிட்டி பல்கலைக்கழகக் கல்லூரி – 2017

---

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த குளியாப்பிட்டி பல்கலைக்கழகக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 1882/51 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகக் கல்லூரியின் 17(2) ஆம் வழிகாட்டல் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI - 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த குளியாப்பிட்டிப் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய கணக்காய்வுக் கட்டணத்திற்கு நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்குகள் மற்றும் சம்பளங்களுக்கான கணனி முறைமையொன்றுக்கான தயாரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகள் செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 95,250 மற்றும் ரூபா 758,287 செலுத்த வேண்டிய தொகைகள் கணக்குகளுக்கும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய மூன்று சொத்துக்கள் வகைகளின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 242,758 தொகை மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மூன்று சொத்துக்கள் வகைகளின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 729,183 தொகை குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 486,425 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) செய்துமுடிக்கப்பட்ட நிர்மாண வேலைகளின் பெறுமதியினைக் கணிப்பிட்டிராது மீளாய்வாண்டில் கட்டிடங்களின் அபிவிருத்திக்கு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ரூபா 9,165,000 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், முற்பணம் முழுமையாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2002 நவம்பர் 28 இன் IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 ஏப்ரல் 25 இன் 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 09 ஆம் பிரிவு | புதிய சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சம்பளங்களின் அடிப்படையில் பணிக்கொடைக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதி விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,912,306 மிகைகளுக்கு எதிராக ரூபா 2,232,107 பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்டிருந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,144,413 பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டெழும் மானியங்கள் ரூபா 5,049,950 இனால் அதிகரித்திருந்த போதிலும், பதவியணியினர் கிரயம் ரூபா 4,739,457 ஆகவும் சேவைச் செலவினங்கள் ரூபா 5,103,643 ஆகவும் காணப்பட்டமை மேற்குறித்த பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளுக்கான நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்வு செய்கையில், 2015 ஆம் ஆண்டில் ரூபா 667,134 பற்றாக்குறையொன்று ஏற்பட்டபோதிலும், 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,912,306 தொகையுடைய மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் நிதிசார் விளைவுகளில் மீண்டும் ரூபா 2,232,107 தொகையான நிறுவகத்திற்கான பற்றாக்குறையொன்று ஏற்பட்டது. எவ்வாறாயினும், நிதிசார் விளைவுகளுக்கான ஊழியர்களின் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர், 2015 ஆம் ஆண்டில் ரூபா 44,459,974 தொகையாகக் காணப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 61,198,824 ஆகக்காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், சபை ஆளுனர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 மார்ச் 24 இன் 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டின் ஆரம்பத்தில் வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவேண்டிய போதிலும், மீளாய்வாண்டுடன் தொடர்புடைய பெறுகைத் திட்டம் 2017 ஒக்தோபர் 11 இல் தயாரிக்கப்பட்டிருந்தது.

**4.1.2 செயற்பாடும் மீளாய்வும்**

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 08 பாடநெறிகளுக்காக நடாத்தப்பட்ட 03 பரீட்சைகளுக்கு தோற்றிய 563 மாணவர்களில், 04 சதவீதம் தொடக்கம் 68 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினையுடைய எண்ணிக்கையான மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்திருந்தனர். மேலும், மேற்குறித்த பாடநெறிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள 2016 யூலை மாதத்தில் நடாத்தப்பட்ட பிரயாண மற்றும் சுற்றுலா முகாமைத்துவப் பாடநெறியின் ஆரம்ப பரீட்சைக்கு தோற்றிய 26 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் சித்தியடையத் தவறியிருந்தனர்.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துல்லியமான விபரக்குறிப்புக்கள் மற்றும் பகல் மற்றும் இரவு வேலைமாற்ற நேரங்களுக்குத் தேவையான பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை துல்லியமாக இனங்காணப்பட்டிருக்காமையினால் மீளாய்வாண்டின் செப்தம்பரில் உடன்படிக்கைத் தொகையினை விட அதிகமாக ரூபா 585,612 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், கல்லூரியின் பாதுகாப்பு சேவைக்காக விலைமனுவினை அழைக்கும் போது மேலும் ரூபா 758,287 தொகையொன்று செலுத்தவேண்டியிருந்தது.

(ஆ) 5.4 ஹெக்டேயர்கள் பரப்பில் அமைந்துள்ள கல்லூரியின் காணிப் பரப்புத்துண்டு முறையாக கொள்வனவு செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் ரூபா 9,165,000 தொகையுடைய நிர்மாணங்கள் மற்றும் நவீனமயப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

கணக்குகள் மற்றும் சம்பள செலுத்துகை தொடர்பில் கணனி முறைமையொன்றின் ஸ்தாபிப்புக்கு சந்தை விலை முறைமையின் கீழ் 07 நிறுவனங்களிடமிருந்து கேள்வி விலைகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும், 02 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கேள்வி விலைகள் பெறப்பட்டன. அவற்றின் மீதான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களினை சமர்ப்பித்திராது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு குறைந்த விலையினை நிராகரித்திருந்ததுடன் கொள்வனவு ரூபா 539,750 இற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,435,000 தொகையான மோட்டார் வாகன தொழில்நுட்ப சக்கர சீரமைப்பு பிரிவிற்கான (Wheel Alignment Division) பாடநெறிக்கு 2015 மார்ச் 24 இல் பெறப்பட்ட ரூபா 1,435,000 தொகையுடைய உபகரணத்தில் தொழிற்பாட்டு பிழையொன்றின் விளைவொன்றாக, அந்த உபகரணம் கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 28 ஆந் திகதியிலுள்ளவாறு அண்ணளவாக 03 வருடங்கள் காலப்பகுதிக்கு விளைவற்றுக் காணப்படுகின்றது. உபகரணத்தை தொடர்புடைய முகவர் பரீட்சித்திருந்த போதிலும், அதனை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு மாற்றுவதற்கு முடியாதிருந்தது. தொடர்புடைய உபகரணம் விளைவற்றுக் காணப்பட்டமை மாணவர்களின் செய்முறைப் பயிற்சிகளில் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 சனவரி 01 இல் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா 312,000 கிரயத்தில் பெறப்பட்ட Say Bolt Viscometer Apparatus இன் முறையான தொழிற்பாட்டின் பற்றாக்குறை காரணமாக, கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 28 இல் உள்ளவாறு தனியார் நிறுவனங்களிடமிருந்து செயன்முறைப் பயிற்சிகளை எடுக்க வேண்டியிருந்த தேவை அவதானிக்கப்பட்டது.

## 4.5 ஆளணி நிர்வாகம்

கல்விசார் ஆளணியிலுள்ள ஆறு விரிவுரையாளர்கள் மற்றும் இரண்டு செயன்முறையாளர்கள் (Demonstrators) மற்றும் கல்விசாரா ஆளணியிலுள்ள இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள், ஒரு பராமரிப்பு தொழில்நுட்பவியாளர் மற்றும் இரண்டு ஆய்வுகூட உதவியாளர்கள் கல்லூரயில் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும், விவசாயிகள் மற்றும் இயந்திரங்கள் பாடநெறி மற்றும் நிர்மாண தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு 2016 ஏப்ரல் மற்றும் நவம்பர் வரை விரிவுரையாளர்கள் காணப்படாமையின் விளைவொன்றாக உரிய நேரத்தில் அந்த பாடநெறிகளை நடாத்துவது சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களினை அடைந்துகொள்ளல்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 இன் NP/SP/SCG/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம், கல்லூரி தனது பரப்பெல்லையின் கீழ் காணப்படும் செயற்பாடுகளினை அறிந்திருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளினை இனங்கண்டு கொள்ளும் போது பூரணத்துவமான, நியமான மற்றும் தரமான கல்வியொன்றிற்கான சான்றிதழ்கள் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் பூராகவும் கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் கீழான இலக்குகள் இனங்காணப்பட வேண்டிய போதிலும், வறுமையொழிப்பு நோக்கமாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், இனங்காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்காததுடன் அடிப்படை ஆண்டுகள் மற்றும் அடிப்படை தரவு இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தரமான மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களின் அருமை காரணமாக, நோக்கங்கள் மற்றும் இலக்குகளினை அடைந்து கொள்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றுடன் தொடர்புடைய தரப்பினர்களினை இனங்காண்பதற்கான சுற்றறிக்கைகள் அல்லது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக விழிப்புணர்வுகள் மீளாய்வாண்டின் போது கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஅம்ஏ/2009(1) ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 03 வருடங்கள் கடந்திருந்த போதும் அவ்வாறான பிரிவொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 கணக்காய்வுக் குழுக்கள்

2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகளினை மேற்கொள்ளும் போது ரூபா 5.5 மில்லியனாகக் காணப்பட்ட கொள்வனவுகள் தொகை எல்லையினை ரூபா 1.5 மில்லியனால் மிகைத்து கொள்வனவு செய்வதற்கு பெறுகைத் தீர்மானங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கொள்வனவு கல்லூரியின் பெறுகைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளினை மிகைத்து விலகல்களுக்காக 8 சந்தர்ப்பங்களாக பிரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை செயற்பாடுகளில் ரூபா 11,142,000 தொகையையுடைய 03 ஒப்பந்தங்கள் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபை அல்லது திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிந்தது. அதேபோல், அதற்கு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாததிலிருந்து, ஒவ்வொரு நிர்மாணத்தினையும் நிச்சயமாக பூர்த்தியாக்குவதற்கான காலப்பகுதியினை வெளிப்படுத்துவது சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

(இ) 2016 செப்தெம்பர் மாதத்தில் விலைமனுக்களினை அழைப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,179,821 தொகையான தளபாட உபகரணங்கள் மற்றும் ரூபா 6,668,599 தொகையான ஆய்வுகூட உபகரணங்களின் கொள்வனவு 2017 ஒக்தோபர் வரை தாமதமடைந்து காணப்பட்டது.

(ஈ) திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து அளிக்கப்பட்ட ரூபா 2,300,000 தொகையுடைய ஏற்பாடுகளின் அடிப்படையில் 03 தளபாடம் மற்றும் உபகரணத்தின் கொள்வனவுக்கு ரூபா 3,885,963 தொகையொன்று ஏற்பட்டமையினால், மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,585,963 இனால் மிகைத்தமை தொடர்பில் பொருத்தமான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 இன் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம், நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பாதீடு 2016 திசெம்பர் 10 இல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 23 செலவின வகைகளில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 09 சதவீதம் தொடக்கம் 125 சதவீதம் வரை வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமை மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | • பேரேட்டுக் கணக்குகளுக்கு, நாளேட்டுப் பதிவுகள் பதியப்பட்டிராமை மற்றும் பேரேட்டுக் கணக்குகள் சமப்பட்டிராமை.<br>• நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைப் பேணாமை<br>• வருமான மற்றும் செலவின குறியீட்டு இலக்கங்கள் சரியாக பதியப்படாமை.<br>• ஆரம்ப மீதிகள் உள்ளடங்கலாக ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 137 நாளேட்டுப் பதிவுகளுக்கு அங்கீகாரம் எடுக்கப்படாமை. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடங்களினை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பாடநெறிகள் பூர்த்தியாக்கப்படாமை மற்றும் மாணவர்களுக்கு போதுமான செயன்முறைப் பயிற்சியினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |